## கொசூரிலுள்ள அயன்குளத்தைப் புதுப்பித்தல்

*101 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கொசூர் அயன்குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) காலதாமதத்திற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) 1968-ம் வருடம்.

(இ) & (உ) எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்திக்கு ஆகும் செலவும், நில ஆர்ஜிதத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகையும் மிக அதிகமாக இருந்ததால், இத்திட்டம் 1970-ல் கைவிடப்பட்டது. பின்னர், இத்திட்டம் மறுபடியும் பாசனப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்ட ரூ. 1.62 லட்சத்திற்கான மதிப்பீட்டுடன் உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலம் அரசுக்கு ஜனவரி 1973-ல் பரிந்துரைக்கப்பட்டு அரசிற்கு வந்துள்ளது. இது சிக்கனமற்ற திட்டமாதலால் இத்தகைய திட்டங்களுக்கென நிதி ஒதுக்கப்பட்டால் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்த கொசூர் பகுதி மிகமிகப் பின்தங்கியபகுதி. மக்கள் குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகிற பகுதி. ஆகவே, கொஞ்சம் அனுதாபத்தோடு இதை அணுகி விரைவிலே முடித்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதில் அனுதாபம் இருக்கிறதா, இல்லையா என்பதல்ல பிரச்னை. சிக்கனமற்ற திட்டம் என்று அரசாங்கம் இதை ஒத்தி வைத்திருக்கிறது. சிக்கனமற்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படும்போது இதுவும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படும்.